ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

11,640 — 1959 ජනවාරි 16 වැනි සිකුරාදා — 16.1.1959

11,640 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### வித்தியா பகுதி

**நூல்நிலையப் புத்தகங்களை விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள்—1958/59**

நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை, 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ந் திகதி, பி.ப. 2.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, (விநியோகக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரில் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச் சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1958 ம் ஞூ ஜனவரி மீ 16 ந் வ.

எல். டி. எஸ். கருணரட்ன.
வித்தியாதிபதிக்காக.

---

### நீர்ப்பாசன இலாக்கா

பொலனறுவை வடகீழ் பெரும்பகுதி நீர்ப்பாசன எஞ்சினியர் (D. I. E. N.E.D.) 1959 ம் ஆண்டு தை மாதம் 28 ம் திகதி புதன்கிழமை பகல் 9.30 மணிவரை "காண்டர் ரோட்" 6 ம் கட்டை துவக்கம் 8 ம் கட்டைவரை கல்பதித்தல், சீர்திருத்தம் செய்தல், தார் பூசுதல் ஆகியவற்றிற்கு ரெண்டர் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

ஹிங்குரக்கடை உட்பகுதி நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெறப்பட்ட தாள்களில் இரட்டையாக ரெண்டர் பத்திரங்களை சமர்ப்பிக்கப்படவேண்டும். அதன் விபரங்களை அக்கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

ரூபா 45,000·00, 45,000.00, 8,000.00 க்குப் பதியப்பட்ட காந்திருக்ட்டர்கள் 20. 1. 59 தொடக்கம் 24. 1. 59 வரையும் ஒவ்வொரு றெண்டர் ரூபா 50.00, 50.00, 25.00 விகிதம் முறையே காட்டி ஹிங்குரக்கொடை உட்பகுதி நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆயுதங்களோ, வேறு சாமான்களோ காந்திருக்ட்டர்களுக்கு கந்தோரில் கொடுக்கப்படமாட்டாது.

ஜ. இ. தமன்கடுவ, உ. ப.

---

### கல்விப் பகுதி

**மட்/ஆரைப்பற்றை சிரேஷ்ட பாடசாலை, திரி/எதபெண்டிவெவ சி. க. பாடசாலை—பாடசாலை கட்டல்**

2. 1. 59 ம் தேதியிடப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில், மட்/ஆரைப்பற்றை சிரேஷ்ட பாடசாலையில் பாடசாலைக் கட்டிடம், விஞ்ஞானகூடம், கிணறு, கக்கூசு கட்டுதல், திரி/எதபெண்டிவெவ சி. க. பாடசாலையில் பாடசாலைக் கட்டிடம், ஆசிரியர் விடுதி, கிணறு, கக்கூசு கட்டுதல் சம்பந்தமாக கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென்ற விளம்பரத்தின் தொடர்பாக அறிவிப்பது யாதெனில் :—

ஏற்கனவே அரசாங்கத்துடன் கொந்திருத்து வேலைகள் செய்து கொண்டிருக்கும் விண்ணப்பக்காரர்கள் மேற்படி கொந்திருத்து வேலைகளின் திருப்திகரமான முன்னேற்றத்தைக் குறிக்கும் அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை அதற்குரிய உத்தியோகத்தரிடமிருந்து பெற்று கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது அனுப்ப வேண்டும். மேலே கூறப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் கீழ் கண்டவாறு அமைய வேண்டும் :

(அ) வேலையின் பெயர் ;

(ஆ) கொந்திருத்தின் தொகை ;

(இ) கொந்திருத்தின் திகதி ;

(ஈ) முடிக்கவேண்டிய திகதி ;

(உ) வேலையும் அதன் முன்னேற்றமும் (திருப்திகரமானதா இல்லையா);

(ஊ) வேலைப்பகுதியின் உள்ளூர் அதிகாரியின் கையொப்பமும் திகதியும்.

மேற் கூறப்பட்டது நான் தற்பொழுது இலங்கை அரசாங்கத்துக்காகச் செய்துகொண்டிருக்கும் எல்லா கொந்திருத்து வேலைகளினதும் பூரணமான அறிக்கையாகும்.

கொந்திருத்துக்காரரின் கையொப்பம்.

2. கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது கொந்திருத்துக்காரர்கள் தாங்கள் செய்துகொண்டிருக்கும் கொந்திருத்து வேலைகளின் விபரங்கள் எவற்றையாவது மறைப்பின் அரசாங்கம் அவர்களது கொந்திருத்து வேலையை எந்த நிலையிலும் நிர்ணயிக்கும் உரித்துடையது.

3. மேலே குறிக்கப்பட்ட வேலைகளுக்குரிய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 30. 1. 59 வரையும், கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் திகதி 29. 1. 59 வரையும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

கல்விக் காரியாலயம்,
மட்டக்களப்பு,
1959 ம் ஞூ ஜனவரி மீ 9 ந் வ.

சி. தணிகாசலம்,
பதில் கல்வி அதிகாரி, கீ. மா.

---

### வவுனியா மாவட்ட பகுதி சிறிய நீர்ப்பாசன வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள்

கீழே தரப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரவர்களால் 1959 ம் ஆண்டு பெப்ருவரி 10 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**திருத்த வேலை**
வவுனியா தெற்கு காரியாதிகாரி தமிழ்ப் பிரிவு

1. புண்ணியர் கட்டின குளம்
2. சின்னக் குளம் (வாய்க்கால்)
3. மாளிகை
4. சுந்தரயுடையார் புளியன்குளம்
5. மூண்டுமுறிப்பு
6. புளிதறித்த புளியன் குளம்
7. மறக்காறம்பளை

**சுலுசு கட்டும் வேலைகள்**
வவுனியா தெற்கு காரியாதிகாரி தமிழ்ப் பிரிவு

1. இலுப்பைக் குளம்
2. பெரிய புளியன்குளம்
3. தாண்டிக்குளம்
4. ஆண்டியா புளியன்குளம்
5. பெரிய நொச்சிக் குளம்
6. ஓமந்தை
7. நாவற்குளம்
8. நெல் வேலிக் குளம்

திருத்தவேலை — சுலுக கட்டும் வேலைகள்

வவுனியா தெற்கு காரியாதிகாரி (சிங்களப் பிரிவு)

| வவுனியா வடக்கு காரியாதிகாரி பிரிவு | 9. புதுவிளான் குளம் வவுனியா வடக்கு காரியாதிகாரி பிரிவு |
|---|---|
| 8. சங்கிலி முறிப்பு | 10. கான்சூரை மோட்டை |
| 9. கரப்புக்குத்தி | 11. கூலான் குளம் |
| | 12. கருவேலன் கண்டல் |
| | 13. இயங்கன்குளம் |

வவுனியா தெற்கு காரியாதிகாரி (சிங்களப் பிரிவு)

10. பறையர் சின்னக்குளம்

வவுனியாக் கச்சேரியிலுள்ள நீர்ப்பாசனப் பகுதியில் இருந்து 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 9 ந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கும்பொழுது வவுனியா அரசாங்க அதிபர் அவர்கள் பேரில் ரூபா 25.00 கச்சேரியில் கட்டியதற்கான பற்றுச் சீட்டு இணைத்தல் வேண்டும்.

மற்றும் விபரங்கள் வவுனியாக் கச்சேரியில் உள்ள நீர்ப்பாசனப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

டி. எம். எ. ஸ்பெல்டவின்,
அரசாங்க அதிபர், வவுனியா மாவட்டம்.

வவுனியாக் கச்சேரி,
1959 ம் ஆண்டு ஜனவரி மீ 9 ந் உ.